DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 21/2023
Miscellaneous :
Sessions : PW 3
Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | சக்திவேல் |
| Father / Husband Name | துரை |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 07.05.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது கருவிழந்தநாதபுரம் கிராமம் மயிலாடுதுரை மாவட்டத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசரில் உள்ள அசா3 ன் முதலாவது கையொப்பம் அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** என் பக்கத்து வீட்டுக்காரர் முருகன் என்பவர் விபத்தில் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். நான் வந்து பார்த்தேன், அப்போது போலிசார் என்னிடம் கையொப்பம் கேட்டார்கள், நான் போட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டது அனுமதி அளிக்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

2. கடந்த 29.08.2022 ம் தேதி பகல் சுமார் 12.30 மணியளவில் மேட்டுப்பாளையம் ஜங்சன் அருகே இருசக்கர வாகனத்தின் மீது அரசு பேருந்து மோதி விபத்து ஏற்படுத்தியது சம்மந்தமாக 30.08.2022 அன்று காலை 8.15 மணியளவில் போலிசார் சம்பவயிடம் வந்து வரைபடம் வரைந்து விசாரணை செய்தார்கள் என்றாலும், அதற்கு நான் சாட்சியாக இருந்தேன் என்றாலும் சரியல்ல. மேற்படி பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் சாட்சியாக கையொப்பம் செய்துவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.